Regd. No. M. 4593

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-6 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 14-12-1946 கார்த்திகை மீ 29உ { மலர் 10

# தத்துவ விளக்கம்

## சேலம் காலேஜில் பெரியார் பேச்சு

(சென்றவாரத் தொடர்ச்சி)

4-வது

### மனித அமைப்பு

கடவுள் என்பது பற்றியும், மதம் என்பது பற்றியும், அவற்றிலுள்ள மயக்கம் முரண்பாடு ஆகியவைபற்றியும், அவ்வளவு மயக்கமும், முரண்பாடுகள் இருந்தும் பெரியார்கள் என்பவர்கள் முதல் பல அறிஞர்கள் முதலியவர்களும், அவற்றிற்கு மதிப்புக் கொடுத்து மக்களுக்கும் அவற்றை ஏன் பரப்புகிறார்கள் என்பது பற்றியும் சுருக்கமாகச் சொன்னேன். இனி கடவுளும் மதமும் யாருக்காக என்று கற்பிக்கப்பட்டிருந்து வருகின்றனவோ அதைப்பற்றிச் சிறிது பேசுகிறேன்.

தோழர்களே!

கடவுள், மதம், அவைகளைக் கண்டு நமக்குக் காட்டிய பெரியோர்கள் செயல், அவற்றின் பயன் என்பனவாகியவைகள் யாருக்காக ஏற்பட்டன? அல்லது ஏற்படுத்தப்பட்டன? என்று பார்ப்போமானால் அவை மக்களுக்காகவேயாகும். ஏனெனில் மக்கள்தான் அவற்றை உணரமுடியும் என்பதோடு மக்களுக்குத்தான் அவை வேண்டப்படுகின்றன. மக்கள் நடந்துகொள்ளுவதற்கும் நடத்தப்படுவதற்கும் தான் அவை பயன்படும். ஆகவே அப்படிப்பட்ட மக்களாகிய மனித ஜீவன்களின் அமைப்புப்பற்றியும் அந்த மனித ஜீவனுக்குக் கடவுள் மதத் தத்துவத்தின் பயன் சேர அதாவது பிரத்தியட்சத்தில் அறிவிக்க அனுபவிக்கக் கூடாததாய் இருப்பதால் அதற்காக என்றே கற்பிக்கப்பட்டிருப்பதும் கடவுளைப்போலவே காணமுடியாதது, அறியமுடியாததான ஆத்மா என்பது பற்றியும் முன்னவைகளைப் போலவே ஒரு அளவு தத்துவ விளக்க முறையில் தெரிந்துகொள்ள வேண்டியது இங்கு அவசியமாகும்.

மனிதன் என்றால் என்ன? ஆத்மா என்றால் என்ன? விவகார (லாஜிகல்) முறைப்படி அவைகளின் தத்துவம் என்ன? என்று யோசித்துப் பார்த்தால் மனிதன் என்பது உலகில் காணப்படும் எல்லா வஸ்துகள்—பொருள்கள் போல ஒரு பொருளேயாகும். பொருள்கள் எல்லாம், சரம், அசரம் அதாவது இயங்குவது இயங்காதது, ஜீவன் உள்ளது, ஜீவன் இல்லாதது ஆகிய எல்லாப் பொருள்களும் பெரும்பாலும் கூட்டுப் பொருள்களேயாகும், அதோடு அவை யாவும் குறிப்புப் பெயர்ப்பொருள்களே யாகும். எப்படியெனில் அந்தந்தத் தோற்றத்திற்கு மாத்திரம் கொண்ட அந்தந்தப்பெயர் உடையதேயாகும் உதாரணமாக ஒரு பொருள் என்பதின் கூட்டை, சேர்க்கையைப் பிரித்துவிட்டால் அந்தப் பொருளுக்குள்ள பெயர் மறைந்து அந்தப் பிரிந்த பொருளுக்கு வேறு ஒரு பெயர் ஏற்பட்டுவிடும். இப்படியே கூட்டுகள்—சேர்க்கைகள் பிரியப்பிரிய பெயர்கள் மாற்றமடைந்து முடிவில் காணமுடியாததாகி பெயர் சொல்லவே மயக்கமுண்டாகி முடிவில் மூலப்பொருள் தன்மையை அடைந்துவிடும். இப்படிப்பட்ட சேர்க்கைப் பொருள்களில் ஒன்று தான் மனிதன் என்பதும் என்று உணர்க! இது நன்றாக விளங்க ஒரு மனிதன் என்ற பொருளை எடுத்துக்கொண்டு விவகாரமுறையில் பொருளை நிர்ணயிப்போம்.

ஒரு மனிதனைப்பாருங்கள். அவன் தோற்றத்தில் மனிதனாக இருக்கிறான். பொருளில் மனிதனை என்பது எது மனிதன் என்று தொட்டுக்காட்டுங்கள் பார்க்கலாம். நீங்கள் அந்த மனிதன் என்பவனை எந்த இடத்தில் தொட்டுக் காட்டினாலும் அந்த இடத்தைக்கொண்ட பாகத்துக்கு, வஸ்துவுக்கு வேறு பெயர் இருக்கிறது. நீங்கள் எதைத் தொட்டாலும் சரி, தலையைத்தொட்டால் அதற்கு பெயர் தலை, கையைத் தொட்டால் கை, காலைத் தொட்டால் கால், மார்பைத் தொட்டால் மார்பு, மூக்கைத் தொட்டால் மூக்கு. இப்படியாக நீங்கள் மனிதனின் எந்தப் பாகத்தைத் தொட்டாலும் அதற்கு வேறு பெயர் இருக்கிறது என்பது மாத்திரமல்லாமல் அந்தப் பாகங்களையும் மறுபடியும் தொட்டுக் காட்டும்படி கேட்டால் நீங்கள் தொடும் பாகத்திற்கு மறுபடியும் வேறு பெயர்கள் இருக்கிறது. அதாவது தலையைத் தொடுகிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். தலை என்று சொல்லிக்கொண்டு நீங்கள் மயிரையோ, அல்லது தோலையோதான் தொடுவீர்கள். அப்படியே தான் வீடு, விளக்கு, மேஜை, நாற்காலி, செருப்பு, விளக்குமாறு, பாத்திரம், வண்டி, கப்பல் முதலிய எல்லாப் பண்டங்களுமாகும். இதிலிருந்து என்ன விளங்குகிறது. வஸ்து அல்லது பொருள் என்பது எதுவும் பல பொருள் கொண்ட ஒரு சேர்க்கைப் பொருள். அதாவது பல தன்மைகள் சேர்ந்த ஒரு கூட்டுப் பொருள். அந்தக் கூட்டுப்பொருள்

என்பதும் ஒரு தோற்றத்திற்கு அல்லது ஒரு மாதிரியான அமைப்புக்குப் பெயராகக் கொண்டதே ஒழிய தனிப்பொருள் ஆகாது அதுவே முடிந்த பெயர்கொண்ட பொருள் அல்ல.

எப்படி ஒரே மரத்திலும், ஒரே உலோகமான இரும்பிலும், ஒரே ஆயுதத்தைக் கொண்டு ஒரே மனிதனால் தச்சன் செய்யப்பட்டவைகள் ஒன்று நாற்காலி, ஒன்று பெஞ்சி, ஒன்று கட்டில், ஒன்று பெட்டி, ஒன்று பீரோ, ஒன்று வண்டி, ஒன்று இரயில், ஒன்று கப்பல், ஒன்று இன்ஜின் அது என்று பல பொருள்களாகக் காணப்படுகின்றனவோ அதாவது மரம், இரும்பு, ஆகிய இரண்டு "மூலப்பொருள்கள்" சேர்க்கையால் மாற்றமான தோற்றம் கொண்ட பல்லாயிரக் கணக்கான பொருள்கள் காணப்படுகின்றனவோ அதுபோலவே ஜீவப்பிராணிகளும் குறிப்பாக மனித ஜீவனும் ஒரு சில மூலப்பொருள்களின் சேர்க்கையால் மனிதனாகத் தோற்றமளிக்கும், ஒரு நகரும், இயங்கும் வஸ்துவே ஆகும். மாடு, பன்றி, கழுதை, குதிரை, யானை, சிங்கம், புலி, நரி, பாம்பு, தேள், பறவை, பூச்சி, புழு கிருமி முதலாகிய உலகில் காணப்படும் எல்லா ஜீவப்பிராணிகளும் இப்படியே பொருள்களின் கூட்டு சேர்க்கையால் ஏற்பட்ட தோற்றமே யாகும்.

இதில் மனிதன் என்பவனுக்கு மற்றப் பொருள்களை விட, மற்ற ஜீவராசிகளைவிட அதிகமாக மதிப்புக் கொடுக்கவேண்டிய அவசியம் ஒன்றுமே இல்லை. பின் ஏன் மனிதன் மற்ற ஜீவராசிகளைவிட மேல் என்று சொல்லப்படுகிறது என்றால் மனிதன் பேசுகிற ஒரு சக்தியை உடையவனாய் இருப்பதால் அந்தச் சக்தியைப் பயன்படுத்தித் தன்னை உயர்ந்தவன் என்று சொல்லிக்கொள்ளுகிறான். எப்படி ஒரு பட்சி தனக்குப் பறக்கிற சக்தி இருப்பதால் அந்தப் பறக்கிற சக்தியால் ஆகாயத்தில் பறந்து தன்னை எல்லா ஜீவராசிகளைவிட மேலான சக்தி வாய்ந்ததாக ஆகாயத்தில் இருந்து காட்சி அளிக்கிறதோ அது போல் மனிதன் தனக்கு உண்டான சக்தியை இப்படிச் சொல்லப் பயன்படுத்திக்கொள்ளுகிறான் என்பதல்லாமல் மனிதனிடம்தான் உயர்ந்த ஜீவன் என்று சொல்லிக்கொள்ள எந்த ஒரு தனிப்பட்ட குறிப்பும் அடையாளமும் இல்லை என்றே சொல்லுவேன்.

மனிதனால் எண்ணப்படும், பேசப்படும், செய்யப்படும் காரியங்களில் எதிலாவது மற்ற ஜீவன்களைவிட உயர்ந்த தன்மை எதாவது இருக்கிறதா என்று பார்த்தால் அவனிடத்தில் மற்ற ஜீவன்களைவிட தாழ்ந்த தன்மைகள் பல இருப்பதாகச் சொல்லலாமே தவிர உயர்ந்த தன்மையைக் குறிக்க ஒன்றினாலும் காணமுடியவில்லை.

மனிதனுக்குப் பகுத்தறிவும் சிந்தனா சக்தியும் மற்ற ஜீவப்பிராணிகளைவிட அதிகமாக இருக்கின்றன என்பது ஒப்புக்கொள்ள வேண்டியதாகும். அதுபோலவே மனிதனுக்கு இல்லாத சில சக்தி மற்ற ஜீவன்களுக்கும் இருக்கின்றன என்றாலும் இவற்றால் மற்ற ஜீவன்களுக்கு, மனிதனுக்கு லாபம் என்ன? இதனால் ஏற்படும் நன்மை என்ன? என்பனவாதியவை யோசிக்கவேண்டியதாகும்.

முதலாவதாகப் பகுத்தறிவும் சிந்தனா சக்தியும் இருக்கிற காரணத்தாலேயே மனிதனுக்கு மாத்திரம் ஒழுங்காய் ஒழுக்கமாய் நடக்கக் கடவுளும் மதமும் தேவைப்பட்டிருக்கின்றன. இவை இல்லாதிருக்குமானால் மனிதன் நேர்வழியில் நடக்கமாட்டான் என்கின்ற கெட்டபெயருக்கு அருகதை உடையவனாக ஆகிவிட்டான்.

மனிதனின் பகுத்தறிவானது மனிதனுக்குச் சாந்தியற்ற நிலைமையையும், எல்லையற்ற ஆசையையும் பொறாமையான போட்டியையும் உண்டாக்கி ஓய்வில்லாமல் செய்து இருக்கிறது.

மனிதனுடைய சிந்தனா சக்தியானது மனிதனை மனிதன் உண்ணவும், மனிதனை மனிதன் ஆண்டவும், மனிதனை மனிதன் இழிவுபடுத்தவும், மனிதனை மனிதன் கொடுமையான காரியங்களைச் செய்யச்செய்கிறது.

பகுத்தறிவும் சிந்தனா சக்தியும் இல்லாத மற்ற ஜீவப்பிராணிகளிடம் இருக்கும் எந்தக் கெட்ட காரியம் மனிதனிடம் இல்லை என்றுசொல்லமுடியும்? மற்ற ஜீவனைத் தொல்லை கொடுப்பது, வஞ்சிப்பது, துன்பப்படுத்துவது முதலாகிய கெட்ட சுபாவம் பகுத்தறிவும் சிந்தனா சக்தியும் படைத்த மனிதனிடம் இல்லை என்று யாராவது சொல்லமுடியுமா?

சித்திரமெழுதுவதும், கவி பாடுவதும், தங்கம் செய்வதும், செத்தவனைப் பிழைக்கவைப்பதும், ஒரே நாளில் லண்டன் போய் வருவதும், நான் மனிதத்தன்மைக்கு மேலானவன் என்று 40 கோடி மக்களையும் ஏமாற்றுவதுமான அரும் சக்தி இருப்பதாலேயே மனிதன் உயர்ந்த ஜீவன் ஆகிவிடுவானா என்று யோசித்துப்பாருங்கள், அல்லது சாகாமல் இருப்பதாலேயே உயர்ந்த ஜீவன் ஆகிவிடுவானா? ஒரு ஒரு ஜீவனுக்கு ஒரு ஒரு சக்தி அமைந்திருப்பதுபோல் மனித ஜீவனுக்கு ஒரு சக்தி அமைந்து இருக்கிறது என்று சொல்லலாமே தவிர எல்லா ஜீவராசிகளைவிட மனிதன் உயர்ந்தவன் என்பதைக் குறிக்க மனிதனிடம் ஒன்றும் இல்லை என்றே சொல்லுவேன்.

குணம், எண்ணம், நடப்பு ஆகியவைகளைப் பொறுத்தவரை ஜீவ சுபாவங்கள், ஜீவ இயற்கை ஒரு மாதிரியாகத்தான் இருக்கின்றன. ஜீவன்கள் பிறப்பு, வாழ்வு, இனப்பெருக்கு, முடிவு ஆகியவை ஒரே தத்துவத்தைக் கொண்டவைகளே தவிர வேறல்ல.

ஆனால் மனிதன் சமுதாயத்தில் தனித்தனியாகக் கருதப்படுகிறான்.

நல்லவன், கெட்டவன், கோபக்காரன், சாது, பொய்யன், உண்மையன், தர்மிஷ்டன், அன்புள்ளவன். கொடுமைக்காரன், திருடன், வஞ்சகன், நன்றியுள்ளவன், நன்றிகெட்டவன், விவேகி, மடையன், பெருமைக்காரன், முன்கோபி, நடப்புக்குரியவன், வஞ்சகன் என்பன முதலாகிய பல குணங்களை மக்களுக்கு நாம் கற்பிக்கிறோம்; அல்லது பல குணங்களை மக்களிடத்தில் காண்கிறோம். இந்தப் பேதங்களுக்குக் காரணம் என்ன? இந்தக் குணங்களுக்கு அந்தந்த மக்களே பொறுப்பாளிகளா அல்லது அவர்களது அமைப்பு அதாவது அந்தந்த சரீர உடல் அமைப்புக் கூறு பொறுப்பானதா? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

ஒரு நாய் இருக்கிறது. அதனிடத்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# நமக்கு வேண்டியது சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?

(தோழர் M. சிங்காரவேலு B.A., B.L.)

(23-11-46 குடி அரசின் தொடர்ச்சி)

முதல் மகாயுத்தத்தில் (1914-1918) குண்டு பீரங்கிகளால் சாம்பலான உயிர்களைக் கொண்டும், செல்வங்களைக் கொண்டும், உலகிலுள்ள மக்கள் ஒவ்வொருவருக்கும் 5 ஏக்ரா நிலமும், அதற்கு வேண்டிய விதையும், கலப்பை முதலிய ஆயுதங்களும் அமைத்துக் கொடுக்கக்கூடுமாம். இதன்றியும் மேஜை நாற்காலியுடனும் சமையல் பாத்திரங்களும், தீபங்களும் நிறைந்த வீடொன்றை ஒவ்வொருவனுக்கும் கட்டிக் கொடுக்கலாமாம்! 60 வயதிற்கு மேற்பட்ட வயது சென்ற ஒவ்வொருவனுக்கும் old age pension என்று கூறப்படும் தள்ளாதார் உதவியை உதவலாமாம். ஒவ்வொரு கிராமத்திலும் குழந்தைகளைச் சுகாதார விதிப்படி வளர்க்க சம்ரட்சண விடுதிகளை அமைக்கலாமாம்! ஒவ்வொரு மக்களும், பால், தயிர், வெண்ணை உண்ண சௌகரியங்களை ஏற்படுத்தலாமாம். இவ்வளவு சுகபோகங்களை அளிக்கக்கூடிய செல்வத்தை 4 வருட சண்டையில் கரியாக்கிய அரசுகள், ஒவ்வொன்றிற்கும் அந்தச் சண்டைசெய்ய என்ன பித்தம் பிடித்ததோ, அது யாருக்கும் விளங்கவில்லை.

இவ்வித உன்மத்த அரசுகளால், பாரத இராமாயண கால முதல் நாளது வரை உண்ண வேண்டிய உணவுகளும், இருக்க வேண்டிய வீடுகளும், அனுபவிக்கவேண்டிய மற்ற சுகபோகங்களும், வருடாவருடம் சம்பலாய்ப் போகின்றன. இதற்கெல்லாம் மூலகாரணமாயுள்ளது, இந்தப் பாழும் தனிவுடைமையே!

## பொதுவுடைமை விளக்கம்

இவ்வளவு உலக வியர்த்தத்திற்குக் காரணம் தனிவுடைமையென்றால், அதற்கு என்ன சந்தேகம்? அதனை ஒழிப்பதற்காகிலும், அல்லது மாற்றுவதற்காகிலும் என்ன வழி? ஒரே வழிதான் உண்டு. அது யாதெனில் பலருக்கு உபயோகப்பட வேண்டிய செல்வத்தைச் சிலரால் துர் உபயோகப்படுத்துவதை ஒழித்து பலருக்கும் உபயோகப்படும்படி செய்வதேயாகும். நிலத்தில் விளையும் செல்வமனைத்தும் நிலத்திற்குச் சொந்தக்காரனால், அல்லது அவனுடைய சந்ததியாரால் துர்விநியோகப்பட்டு வருகின்றன: நிலத்தில் வெட்டி எடுக்கப்படும் பொன், வெள்ளி, கரி, இரும்பு முதலிய உலோகங்கள் யாவையும் சிற்சிலரே சொந்தமாக்கிக்கொண்டு, மற்றவர்களுக்கு உதவாமல் தாங்களும் தங்களுடைய சந்ததியாரும் அவற்றை வீணே உபயோகித்து வருகின்றார்கள். ஆனால், இந் நிலங்களை இவர்கள் உண்டாக்கினார்களில்லை. பிறக்கும்போது கொண்டுவந்தார்களில்லை. இறக்கும் கொண்டு போவதுமில்லை. இவர்களில் யாரேனும் இந்தச் செல்வங்களை உண்டாக்க உழைப்பதுமில்லை. ஆனால் "சொந்தம்" (owner ship) என்ற வெறும் பழக்கச் சொல்லைக்கொண்டு (mere word of habit), அந்நிலங்களில் விளையும் செல்வங்களை துர்விநியோகித்து வருகின்றார்கள். இந்தத் துர்ப்பழக்கத்தை நிறுத்தவேண்டுமானால், விளையும் நிலங்களையும், தோண்டப்படும் சுரங்கங்களையும் பொதுவுடைமையாக்க வேண்டும். அதாவது பலருக்கு உபயோகப்படும்படி நிலங்களைப் பொதுமக்களால் உழுது பயிரிட்டு, அதில் விளையும் தானியங்களைப் பொதுவாக அந்தந்தக் கிராமங்களிலும், அந்தந்தப் பட்டினங்களிலும் களஞ்சியங்களில் சேமித்து, மக்கள் வயிறு நிரம்ப உண்ணுவதற்கும், உடுப்பதற்கும், வீடு வாசல் கட்டுவதற்கும், விநியோகப்படுத்தல்வேண்டும். ஆனால் இதன் சொந்தக்காரர்களாகிய நிலஞ்சுவான்தார்களும், அரசர்களும், ஜமீன்தார்களும், மிராசுதார்களும், சுரோத்திரியம்தார்களும், எப்படிப் போவதென்று கேட்கலாம். இவர்களும் இந்தப் பொதுவுடைமைத் திட்டத்தில் மற்றவர்களைப்போல் கவலையொன்றுமின்றி, 4-மணி நேரம் மற்றவர்களைப்போல உழைத்து, தாங்களும், தங்கள் பிள்ளைகளும், தங்களது சந்ததியார்களும் பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டாக உண்டு களித்து வாழலாம். ஆனால் ஒன்று மாத்திரம் இவர்கள் ஆதிக்கத்திலிருந்து எடுக்கப்படும். அதாவது தங்கள் இஷ்டம்போல் செல்வங்களை நாசப்படுத்திவரும் ஆதிக்கத்தை இவர்களிடமிருந்து நீக்கப்படும். நிலம், நீர் உள்ள தனிவுடைமையைப் பொதுவுடமையாக்க வேண்டுமானால், அரசியல் ஆதிக்கம் பெற்றவர்களால்தான் முடியும். இதனாலேயே சமதர்மிகள் அவரவர

(தொடர்ச்சி 7-பக்கம்)

# குடி அரசு

1946-ஆம் டிசம்பர்ீ 14உ

## பெரிய இடத்துக் காலித்தனம்

இந்திய அரசியல் நிர்ணய சபையைப்பற்றிக் காங்கரஸ்காரர்கள் மகா பெருமையாகப் பேசிக்கொள்ளுகிறார்கள். இதன் காரணம் அச்சபையில் தாங்களும் தங்கள் அடிமைகளும், தங்கள் கூலிகளும் அல்லாமல் வேறு யாரும் அங்கமாய் இல்லாமலே போய்விட்டதால் அதில் தங்கள் இஷ்டப்படி ஏகபோகமாய்ச் செய்துகொள்ளும் முடிவை "தேவவாக்காக", "வேதக் கட்டளையாக" மற்ற மக்கள் கருதவேண்டும் என்பதற்காக அதனை எவ்வளவோ முக்கியத்துவம் கற்பித்து ஏராளமான விளம்பரம் செய்விக்கிறார்கள்.

அந்த அரசியல் பிரதிநிதி சபையில் இந்த நாட்டிலுள்ள 9 கோடி முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. 9 கோடி சுதேச சமஸ்தான மக்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை. 5 கோடி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவர்களது நலம் செலுத்துபவரும் தன்மையில் பிரதிநிதித்துவம் இல்லை. சூத்திரர்கள் என்று சொல்லப்படும் 5 கோடி இடைவிட மக்களுக்கும் பிரதிநிதித்துவம், சூத்திரத்தன்மை ஒழிப்பது என்னும் திட்டத்திற்கு ஒரு பிரதிநிதிகூட இல்லை. மற்றும் "வண்ணார்," "நாவிதர்," "குயவர்," "உழவர்," "நெய்பவர்" என்கின்ற பாட்டாளி மக்களுக்குப் பிரதிநிதித்துவமில்லை. மற்றபடி யாருக்கு இருக்கிறது என்றால் பார்ப்பனர்களுக்கு, இந்து மதத்துக்கு, செல்வவான்களுக்கு, பெரிய பெரிய மிராசுதார், வியாபாரிகள் ஊரார் உழைப்பில் உண்டு களித்து சுக வாழ்வு வாழ்பவர்கள் முதலாகிய உயர்தர மக்கள் என்பவர்களுக்கே பிரதிநிதித்துவம் இருக்கிறது.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் காங்கரஸ் ஸ்தாபனத்தால் தனித்தனியாகப் பார்த்துப் பெயர் குறிப்பிடப்பட்டவர்கள், அதுவும் காங்கரஸ் ஸ்தாபனத்தால் இன்ன இன்ன தனிப்பட்ட நபருக்கு இன்ன இன்ன தனிப்பட்ட நபர்தான் ஓட்டுச்செய்ய வேண்டும் என்று கட்டளை இடப்பட்ட காங்கரஸ்காரர்களால் தெரிந்தெடுக்கப் பட்டவர்களுக்குள் ஆள் ஒன்றுக்கு மூன்றே முக்கால் ஓட்டு, அதாவது நாலு பேர்களாலேயே ஓட்டுப்பெற்றவர்கள்தான் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட அங்கத்தினர்களிலும் 100க்கு 3 அல்லது 4பேர்கள் தவிர மற்றவர்கள் பொம்மைகளாக அமர்ந்திருந்து படி வாங்குவதன் மூலம் வாழ்க்கை நடத்தக் கூடியவர்களும் ஒரு தலைவரின் கண்ஜாடை பார்த்துக் கைத் தூக்கவேண்டியவர்களுமாக இருப்பவர்கள். இவர்களைக் கொண்ட சபையைத்தான் 18-லட்சம் சதுரமைல் விஸ்தீரணமும், பல மதம், பல இனம், பல ஜாதி, பல உள்வகுப்பு, பல பிறவி லட்சியம், பல பிறவி உரிமை, பல பிறவி இழிவு, பல பிறவி உயர்வு முதலிய பேதம்கொண்ட 40 கோடி மக்களையும் கொண்ட நாட்டிற்கு பிரதிநிதி ஸ்தாபனம் என்று இன்றைய விஞ்ஞான உலகில் சொல்லப்படுகிறது.

அரசியல் நிர்ணய சபையின் பொது யோக்கியதை இப்படி என்றால் அதில் உள்ள தனிப்பட்ட மெம்பர்களின் யோக்கியதை எவ்வளவு கேவலமானதாக இருக்கிறது என்பது சபையின் நடவடிக்கையைக் கவனித்தவர்கள் நன்கு அறிவார்கள். 11-12-46ந் தேதி என்று குறிப்பிட்டு 10-12-46ந் தேதி சென்னையில் பிரசுரிக்கப்பட்ட தினசரிப் பத்திரிகைகளில் அசோசியேட் பிரஸ் "நமது சொந்த நிருபர்" சேதி என்னும் பேரால் பிரசுரிக்கப்பட்டிருக்கும் சேதியாக அதன் அங்கத்தினர் ஒருவர் யோக்கியதை மிகமிக கேவலமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த நடத்தைக்குக் காங்கரஸ் பத்திரிகைகளின் பாஷையில் பெயர் கொடுக்க வேண்டுமானால் அரசியல் நிர்ணயசபை மெம்பரின் காலித்தனம் என்றுதான் பெயர் கொடுக்கவேண்டும். காங்கரஸ்காரர் அல்லாமல் வேறு யாராவது அப்படி நடந்திருந்தால் அதைக் காலித்தனம் என்பதாக மாத்திரமல்லாமல் மற்றும் பல விதமான பெயர்களும் கொடுக்கப்பட்டிருக்கும். நாம் அப்படி அந்த முறையில் கொடுக்காமல் சாதாரண முறையில் பெரிய இடத்துக் காலித்தனம் என்று குறிப்பிடுகிறோம்.

என்னவெனில் அரசியல் நிர்ணய சபை அங்கத்தினரில் ஒருவர் சபையில் இந்தியில் பேச ஆரம்பித்து இருக்கிறார். அதற்குச் சபைத்தலைவர் அந்த அங்கத்தினரை ஆங்கிலத்தில் பேசும்படி கேட்டுக்கொண்டார். அதற்கு அந்த அங்கத்தினர் தனக்கு இந்தியில் பேச உரிமை உண்டு என்று சொல்லித் தலைவர் வேண்டுகோளை அலட்சியம் செய்து மறுபடியும் இந்தியில் பேசினார். இதற்குத் தலைவர் மறுபடியும் அங்கத்தினரைப் பார்த்து இச்சபையில் இராஜகோபாலாச்சாரியார் போன்ற பெரியவர்கள் பலர் இந்தித் தெரியாதவர்களாய்

இருப்பதால் தயவு செய்து ஆங்கிலத்தில் பேசுங்கள் என்று வேண்டிக்கொண்டு இருக்கிறார். இதற்கு அந்த அங்கத்தினர் பதில் சொல்லுகிறார். என்ன சொல்லுகிறார்?

"இந்தித் தெரியாத மனிதனுக்கு அரசியல் நிர்ணய சபையில் இடம் கிடையாது; அரசியல் நிர்ணய சபையில் இடம் கிடையாது என்பது மாத்திரம் அல்ல நான் சொல்லுவது, இந்தித் தெரியாதவனுக்கு இந்தியாவிலேயே இடம் கிடையாது என்கிறேன்"

என்று "கர்ஜ்ஜித்து" இருக்கிறார். (இதை ஒரு சென்னைப் பத்திரிகை "ஒரு மெம்பரின் அதிகப் பிரசங்கித்தனம்" என்று கவுரவமாய் குறித்திருக்கிறது) இதன் மீது தலைவர் அந்த மெம்பரைப் பார்த்து "விஷயத்துக்குச் சம்மந்தமில்லாமல் ஏதேதோ பேசுகிறீர்கள், விஷயத்தைப் பேசும்" என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார். இதையும் அந்த அங்கத்தினர் அலட்சியம் செய்துவிட்டுத் தன் இஷ்டப்படி ஏதேதோ பேசினார். தலைவர் வழிமறித்து நீங்கள் ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்றார். அங்கத்தினர் அதை எதிர்த்து அரசியல் நிர்ணய சபை அங்கத்தினருக்குத் தனது அபிப்பிராயம் சொல்ல உரிமை உண்டு என்று சொல்லி மேலும் அளந்துகொண்டே போனார். தலைவர் இடைமறித்து 'ஒழுங்கு ஒழுங்கு' நீர் பேசக்கூடாது உட்காரும் என்றார். சபையினரும் அந்த அங்கத்தினரை, தலைவர் பேச்சுக்கு மரியாதை கொடும் என்றார்கள். அந்த அங்கத்தினர் லட்சியம் செய்யவில்லை. தலைவருக்குக் கோபம் வந்துவிட்டது. அதன்மீது பண்டிதர் நேருவும் மற்ற சில அங்கத்தினரும் எழுந்து சென்று அந்த அங்கத்தினரை இழுத்துக் கொண்டு போய்விட்டார்கள். இது மித்திரன், தினசரி முதலிய காங்கரஸ் பத்திரிகைகளிலேயே காணப்படும் சேதியாகும். அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர் யோக்கியதைக்கு இது ஒரு "சாம்பிள்", எடுத்துக் காட்டு.

இதற்குக் காலித்தனம் என்று பெயர் கொடுக்காமல் வேறு பெயர் என்ன கொடுக்க முடியும் என்று கேட்கிறோம்.

தென்னாட்டு மக்களுக்கு அதிலும் ராஜகோபாலாச்சாரி போன்ற பிரபல தலைவருக்கு அவர் தென்னாட்டவராய் இருக்கிறார் என்கின்ற காரணத்தால் வடநாட்டாரால் எப்படிப்பட்ட மரியாதை கொடுக்கப்படுகிறது என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

இவ்வளவுத் துணிச்சலாகக் காலித்தனம் செய்த அங்கத்தினரை இழுத்துக்கொண்டு போய்விட்டதைத் தவிர வேறு ஒன்றும் செய்யவே இல்லை.

தங்களைப் பெரிய மேதாவிகள் என்றும் தனிப்பிறவி என்றும் சொல்லிக்கொண்டு தங்கள் மார்பைப்பார்த்து நிமிர்ந்து விரைக்கும் காங்கரஸ்காரர்கள் இதற்கு என்ன பதில் சொல்லுவார்கள் என்பது தெரியவில்லை.

இந்தி மாத்திரமல்லாமல் இங்கிலீஷும் தெரியாத சில மெம்பர்கள் அரசியல் நிர்ணய சபையில் அங்கத்தினராய் இருக்கிறார்கள். இவர்கள் கூலி என்ன, இவர்கள் வாங்கி சாப்பிடும் ஆயிரக்கணக்கான ரூபாய் கொண்ட படிச்செலவுக்குப் பயன் என்ன என்பது விளங்கவில்லை. அழிந்துபோன நந்தவனத்தில் ஆடு மேய்ந்தால் என்ன, வேறு எந்த ஜெந்து மேய்ந்தால் என்ன என்பதுபோல் யாருக்கும் பிரதிநிதித்துவமில்லாத ஒரு கூட்டத்தாரின் ஏகபோக ஸ்தாபனத்தில் யார் எக்கேடு கெட்டாலும் நமக்குக் கவலை இல்லை என்றாலும் அதன் யோக்கியதை எப்படிப்பட்டதாயிருக்கிறது என்பதை மக்கள் உணரட்டும் என்று இதைக் குறிப்பிட்டோம்.

## பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

பெரியார் அவர்கள் 12-12-46ல் கணியூர் பொதுக்கூட்டத்திற்குச் சென்றுவிட்டு, 13ந்தேதி ஈரோடு வந்தார்.

15-12-46ல் ஈரோடு அர்ச்சுனன் படிப்பகத் திறப்பு.

18— தோலி (தஞ்சைமாவட்டம்) பொதுக்கூட்டம்

19— திருச்சேறை (தஞ்சை மாவட்டம்)

22— திருப்பூர் பொதுக்கூட்டம்.

29— பெங்ளூர் செல்லக்கூடும்.

## மதிப்புரை

### "எழுச்சி முரசு"

தோழர் இரா. நெடுஞ்செழியன் B. A. (Hons) அவர்கள் பொன்மலை திராவிட மாணவர் கழக முதலாண்டு விழாவின்போது ஆற்றிய சொற்பொழிவை 'எழுச்சி முரசு' என்ற நூலாக வெளியிட்டுள்ளனர். திராவிட நாட்டின் கண்ணுள்ள ஒவ்வோர் திராவிட மாணவரும் எழுச்சி முரசைப் படித்தல் இன்றியமையாதது. நாட்டின் நலனுக்காகத் திராவிட மாணவர்கள் செய்யவேண்டுவனவற்றை நன்கு விளக்கியுள்ளார் தோழர் நெடுஞ்செழியன். ஏன் திராவிட நாடு பிரிக்கப்படவேண்டும் என்பதற்குத் தகுந்த காரணம் கூறப்பட்டுள்ளது எழுச்சி முரசில். இன்றைய சமுதாயம் சீர்குலைந்திருப்பதைப் படம்பிடித்துக் காட்டப்படுள்ளது. அச்சமுதாயம் சீர்பெறவும் வழி காட்டப்பட்டுள்ளது. மாணவர்கள் மாத்திரமன்றி மற்றவரும் படித்துப்பயன் பெறற்குரியது எழுச்சி முரசு. இதன் விலை 4 அணாதான்.

கிடைக்குமிடம்:— திராவிடர் மாணவர் கழகம். பொன்மலை.

# "நிதி முயற்சியே நமது நிலையின் அளவு கோல்"

## அருப்புக்கோட்டையில் பெரியார் பேச்சு

1-12-46 ஞாயிறு மாலை அருப்புக்கோட்டையில் தோழர் எஸ். எஸ். பழனிச்சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற 10000 மக்கள் கொண்ட மாபெரும் பொதுக்கூட்டத்தில், பெரியார் ராமசாமி அவர்கள் சுமார் 2 மணிநேரம் வரையில் ஆற்றிய சொற்பொழிவின் சாரம் பின்வருமாறு:-

"தலைவரவர்களே! தோழர்களே!! அருப்புக்கோட்டையில் இவ்வளவு பெரிய கூட்டத்தை நான் இன்றுதான் பார்க்கிறேன். மழை பயப்படுத்திக்கொண்டு இருந்தும், சிறு தூற்றல் இருந்தும் சிறிதும் அசையாமல், சந்தடி இல்லாமல், கூடி இருப்பது எனக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுக்கிறது. முதலாவதாக, கழகத் தொண்டுக்காக இராமநாதபுரம் ஜில்லா சார்பாக ரூ. 5001 அளித்ததற்கு உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். கழகத் தொண்டு நிதிக்குத் தமிழ்நாட்டில் மிகச்சிறிய தொகைதான் அதாவது 50-ஆயிரம் தான் வேண்டப்பட்டது. அதற்குண்டான டிக்கட்டுகள் ஜில்லா தோறும் வழங்கப்பட்டு 2, 3 மாதமாகியும் இன்னமும் பகுதிகூட வசூல் செய்யப்படவில்லை. நம் நாட்டில் மற்ற கட்சியினர் கோடி, 50-லட்சம் என்பதாக வசூலிக்கத் திட்டம்போடுகிறார்கள். உத்தேசத்துக்கு மேலாகக் குறிப்பிட்ட காலத்துக்குள்ளாக வசூலித்தும் விடுகிறார்கள். நம் நிலையோ மிக மோசமாக இருக்கிறது. நன்றாகச் சொல்லவேண்டுமானால் திராவிடர் கழகம் அல்லது முன் இருந்த பெயராகிய தென் இந்திய நலஉரிமைச் சங்கம், நம் கைக்குவந்த இந்த 7, 8 வருட காலத்திற்குள் கழகநிதிக்கு என்று ஒரு பைசாகூட பொதுமக்களிடம் வசூலித்தது கிடையாது. அதற்கு முன்னும் சுயமரியாதை இயக்கம் இந்த [illegible] வருஷ காலமாக இயக்கநிதிக்கு என்று ஒரு தம்பிடியும் வசூலித்தது கிடையாது.

### பழைய செலவினங்கள்

மாநாடுகளுக்காக என்று பொதுவாகவும் அந்தந்த ஜில்லாவுக்காகவும் செலவுக்குப் பணம் வசூல்செய்து மாநாடு, கூட்டம், முதலியவை நடத்தி இருக்கலாம். சுமார் 6, 7 வருஷங்களுக்கு முன் இந்தி எதிர்ப்பு இயக்கம் நடந்தபோது எனக்குப் பணமுடிப்பு என்பதாக ஜில்லாக்களுக்கு 1000, 500 வீதம் சுமார் பத்து ஆயிரம் ரூபாய்வரை ஒரு ரூபாய், அரை ரூபாய், ஒரு அணா, கால்அணா என்பதாக வசூல் செய்யப்பட்டு எனக்குக் கொடுக்கப்பட்டது. அது பெரிதும் நான் சிறையிலிருந்து வந்த பிறகு 7, 8 மாதம் இந்தி எதிர்ப்பு கிளர்ச்சி(சத்தியாக்கிரகத்துக்)காக என்று மாதம் 600க்கு குறையாமல் 800 ரூபாய் வரை செலவழித்து "சத்தியாக்கிரகம்" நடத்தப்பட்டது. சில சட்டசபைத் தேர்தல்கள் 1000 2000 வரை செலவழித்து கடலூர் சென்னை, திருவண்ணாமலை, முதலிய இடங்களில் நடத்தப்பட்டவை. சில ஜில்லாபோர்டு தேர்தல்களுக்கும் செலவழிக்கப்பட்டன. மோட்டார் கார்கள் வாங்கி பயன்படுத்தப்பட்டன. இவை தவிர பிரசாரம் பயிற்சி நிலையம், சுற்றுப்பிரயாணம், பிரசாரகர் சம்பளம் சென்னையில் காரியாலயம் முதலியவைகளுக்கும் செலவு செய்யப்பட்டன. வேறு சில காரியங்களிலும் ஏராளமாகப் பணங்கள் செலவழிக்கப்பட்டன. இதற்கு இரண்டொரு செல்வவான்களான தோழர்கள் சிறிது உதவினார்கள் என்பதல்லாமல் மற்றபடி ஷை பணமுடிப்பும், மேலும் அதற்கு சமமான தொகையும், இயக்கத்திற்கும் இயக்கப் பிரசாரத்திற்கும் செலவழிக்கப்பட்டிருக்கின்றன. இயக்கத்தின் பேரால் மற்றவர்களுக்குக் கொடுக்கும் பணமுடிப்புகள் சம்மானங்கள் அவர்கள் சொந்தக் குடும்பச்செலவுக்குச் செலவாவதுபோல் என்னிடம் கொடுக்கும் பணமுடிப்போ பணமோ எதுவும் இயக்கத்திற்கு அல்லாமல் மற்றபடி வேறு எதற்கும் செலவு செய்யப்படவேண்டிய அவசியமே இல்லாத நிலைமையில் பணம் இருந்து வருகிறது. அப்படி இருந்தும், இதுவரை பொது நிதி வசூல் கிடையாது என்பதை நினைவிலிருத்துங்கள். இப்போதும் இயக்கத்திற்குச் செயலாளர், பிரசாரகர்கள், அமைப்பாளர்கள் ஆகியவர்களுக்கும் மற்ற சில காரியங்களுக்கும் திருச்சி மாநாட்டுக்குப் பிறகு மாதம் 300 ரூபாய் போல் செலவாகிக்கொண்டு வருகிறது. அதற்கு முன் மாதம் 150, 200 வீதம் செலவாகி வந்தது. வரவை எதிர்பாராமலே செலவுகள் நடத்தி வரப்படுகின்றன. பிறகு எப்படியோ சரிப்படுத்தப்படுகின்றன.

### ஐந்தாண்டுத் திட்டம்

இந்த 50 ஆயிரம் ரூபாய் நிதி 5வருஷத்திய பிரசாரத் திட்டப் பிளான் ஏற்பாடுசெய்து, அதற்காக என்று வசூலிக்கத்தீர்மானிக்கப்பட்டதாகும். இந்த ஐந்து வருஷத்திற்குள் ஏதாவது கிளர்ச்சி செய்ய நேரிட்டாலும் அதற்கு ஈடு கொடுக்கவேண்டி வரும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாகும். 5வது வருஷ முடிவில் தேர்தலில் நாம் சம்பந்தப்படகூடிய நிலைமை வந்தாலும் வரும். இதற்காக நாம் எதிர்பார்த்தபடி நிதி வசூல் வேலை நடக்கவில்லை. நிதி வசூலுக்கு என்று நானோ, கழகத் தலைவர் வேதாசலமவர்களோ, சம்பந்தமில்லாமல் தனியாக ஒரு கமிட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. கமிட்டித் தலைவர் தோழர் அர்ஜுனன் திடீரென்று அகால மரணமடைந்துவிட்டார்—மற்றவர்கள் சிலர் அலட்சியம், சிலர் ஒத்துழையாமை என்கின்ற வேலையில் இருந்துவிட்டார்கள். நிர்வாகக் கமிட்டித் தோழர்கள்தான் சிலர் முயற்சி எடுத்து வேலை செய்கிறார்கள். இதற்கும் விஷமப் பிரசாரம், எதிர்ப்பிரசாரம், இந்த வசூலுக்கு இடையூறு உண்டாகும்படி இயக்கச் செல்வாக்கைப் பயன்படுத்தி வேறு வசூல் செய்தல் முதலியவைகளால் தொல்லைப்படுத்துவது ஆகிய தடை வேலைகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்த நிலையால்தான் நான் அதிகமாகக் கவலை எடுத்து சொந்த [illegible] செலவழித்து முயற்சி செய்ய வேண்டியதாக ஆகிவிட்டது. இது எனக்கு வெட்கமாக இருந்தாலும் நம் இயக்கத்தின் நிலை அப்படி இருக்கிறது. திருச்சி மாநாட்டுக்கும்,

வரவேற்புக் கழகக் கமிட்டி காரியதரிசி முதலியவர்கள் இருந்தும், நானே டிக்கட்டு அனுப்பவும், சொந்தத்தில் தினம் 10, 20 கார்டு எழுதவும், சொந்த ஆள் அனுப்புவதுமான முயற்சி செய்ய வேண்டியதாக இருந்தது மற்றபடி அந்தந்த ஜில்லாவின் அவரவர்கள் இஷ்டப்படி செலவு செய்யும்படியான மாநாடுகள், நாடகங்கள் கூட்டங்கள் ஆடம்பரங்கள் முதலியவற்றிற்குத் தனிப்பட்ட முயற்சியில் கவலை எடுத்து வசூலித்து செலவு செய்துவிட பலருக்கு சௌகரியமும் ஊக்கமும் இருக்கின்றன. காரியத்தில் பங்கு கொள்ளாமல் குற்றம் கூறுவது அமைப்பும் கணக்கும் சரியில்லை என்பதும் குறைசொல்லுவதுமே பலருக்கு இயக்க வேலையாக இருக்கிறது. பொது வேலை என்றால் நம்மில் கவலை எடுத்துக்கொள்ளும் தோழர்கள் மிகச்சிலர்தான். இல்லாவிட்டால் இந்தச் சிறு தொகைக்கு இவ்வளவு நாளா? இவ்வளவு விஷமப் பிரசாரமா? இவ்வளவு ஒத்துழையாமையா? சிந்தித்துப் பாருங்கள்.

## எதிரிகளைப் பாருங்கள்

நம் எதிரிகள் பார்ப்பனச் சேவா சங்கத்துக்கு ரூ. 50 லட்சம் திட்டம், பார்ப்பனப் பிள்ளைபடிக்க காலேஜ் கட்ட ரூ. 50 லட்சம் திட்டம் போடுகிறார்கள் கொடுப்பவர்கள் நம்மவர்கள். வாங்குகிறவர்கள் பார்ப்பனர்கள். ஒவ்வொரு பார்ப்பன அங்கத்தினரும் வசூலிக்கிறார்கள். ஒரு சிறு கூட்டம், ஒரு சிலர், ஏகபோகமாக நிர்வகிக்கிறார்கள்; கொடுத்தவர்கள் அன்றே கொடுத்ததை மறந்துவிடுகிறார்கள். வசூலித்தவர்கள் வசூல் தான் தங்கள் வேலை என்று கருதுகிறார்கள். மற்றவைகளை யாரோ ஒருவருக்கு விட்டுவிடுகிறார்கள். ஆனால் நம்மவர்கள் தங்களுக்குப் பயன்படவில்லையானால், தங்கள் இஷ்டப்படி நடத்த வசதி இல்லையானால், ஒத்துழையாமையும், சத்தியாக்கிரகமும், தடைவேலையும், விஷமப்பிரசாரமும், செய்கிறார்கள். இந்தக் குணத்திற்கு ஏற்ற நிலையில் தான் திராவிடர்கள் இருக்கிறோம்.

இப்போது எனக்குப் பணம் குறைந்துபோனாலும் வசூலாகவிட்டாலும் கஷ்டமில்லை. ஆனால் திராவிடர் கழகத்தின் தன்மை எப்படி இருக்கிறது? இதுதான் இதை முடிவா? கண்டவர்கள் அனுபவிக்கவா அதன் செல்வாக்கு? என்கின்ற எண்ணம் வருத்துகிறது. எப்படியோ போகட்டும். நானே பாடுபட்டால் தான் காரியம் நடக்கும். இல்லாவிட்டால் இல்லை என்கிற நிலையில் இயக்கம் இயக்கத்திட்டம் இருக்கிறது என்பதை உணருகிறேன்.

இப்படிப்பட்ட நிலையில் இராமநாதபுரம் ஜில்லாவுக்கு அருப்புக்கோட்டை 5001 ரூபாய் ஒரு மாதத்தில் வசூலித்து உதவிவிட்டது. அதிலும் இராமநாதபுரம் ஜில்லாவில் சிறு பகுதியான தென் இராமநாதபுரம் பகுதிக்கு 5001 ரூ. வசூலித்து அளிக்கப்பட்டுவிட்டது. இது மிக மிகப் பாராட்டத்தக்கதாகும், மற்ற ஜில்லாக்களுக்கும் உணர்ச்சி ஊட்டுவதாகும். இயக்கக் காரியத்தைப் பொறுத்தவரை அருப்புக்கோட்டை எப்போதும் முன்னணியில் இருந்து வந்திருக்கிறது. பெருத்த செல்வவான்கள் உள்ள வடக்கு இராமநாதபுரம் ஜில்லா இன்னும் எவ்விதமுயற்சியும் செய்ததாகக் காண முடியவில்லை. சென்னை, செங்கற்பட்டு, தென் ஆற்காடு, மதுரை, தஞ்சை ஜில்லாக்கள் ஆமை நடையில் நடக்கவும், தூங்கவும், அலட்சியமாக இருக்கவுமாக இருந்து வருகின்றன. எப்படியும் அதிக மோசமாக இல்லாமல் தக்க அளவுக்கு வசூலவேலை இனிமேலாவது சரியாய் நடக்குமென்றே கருதுகின்றேன். எப்படியும், தலைவர் தோழர் பழனிச்சாமி அவர்கள் சொன்னபடி 5-வருஷப் பிரசாரத் திட்டத்தை நடத்திவிடலாம் என்றே இருக்கிறேன்.

பிறகு தற்கால அரசியல் நிலை, நாட்டு நிலை பற்றிப் பேசினார்.

---

## வெளியூர் ஆர்டர்கள் தேவை

குறைந்த ரேட்டில் டிரேட்மார்க்கு ரிஜிஸ்டர்களும், பிளாக்குகளும் செய்து கொடுக்குமிடம்:-

முஹம்மத் ஜாபர்,
தஞ்சை ரோடு, திருச்சனாப்பள்ளி.

---

## பொதுக்கூட்டம்

22-12-46ல் திருப்பூரில் தோழர் எஸ் ஆர். சுப்பிரமணியம் தலைமையில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

---

(3-ம பக்கத் தொடர்ச்சி)

தேசத்தில் அரசியல் ஆதிக்கம் பெறல் வேண்டும்.

உலகத் தொழிற்சாலைகள் ஒரு சிறுபான்மையோரால் அந்தந்த நாட்டில் சொந்தமாக்கப்பட்டு அவர்கள் இஷ்டம்போல் நடத்தப்பட்டும், நிறுத்தப்பட்டும் வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகளுக்குச்சொந்தமானவர்கள் உலகில் ஆயிர மக்களில் ஒருவர்கூட இல்லை. ஆனால் 999பேர், 7, 8, 9, 10 மணிநேரம் உழைக்கவும், ஒரு சொந்தக்காரன் அதன் இலாபத்தை அடையவும், இக்கால தனிவுடைமை நடத்தப்பட்டு வருகிறது. இந்தத் தொழிற்சாலைகளை அவைகளின் சொந்தக்காரர்கள் கொண்டுவந்த முதலென்பார்கள். இந்த முதல் இல்லாமற்போனால் எதுவும் செய்ய முடியாதென்பார்கள். ஆனால் அந்த முதல் எது? நிலம், நீர் இரும்பு, கரி முதலிய இயற்கைச் சொத்துகள் மனிதன் உலகில் தோன்றுவதற்கு முன்னிருந்தே இருந்து வருகின்றன.

[தொடரும்]

---

## திராவிடப் புரட்சிக் கொடி

வெள்ளி இழையினால் மூன்று சைஸ்களில் பேட்ஜுகள், இயக்க சம்மந்தமான பட்டன் வகையறாக்கள், முஸ்லிம் & கம்யூனிஸ்டு கொடிகள். தேவைக்கு,

N. R. சாமி,
ஜெனரல் மெர்சண்ட்,
மெ. மெ. வீதி, காரைக்குடி.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தில் நன்றி காட்டுதல், வீடு காத்தல், எஜமானிடம் விஸ்வாசம் முதலிய குணங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த குணங்கள் சற்றேறக்குறைய நாய் போலவே தோற்றமளிக்கும் ஓநாய், நரி, குள்ளநரி ஆகியவைகளிடத்தில் இல்லாமல் நேர்மாறாய் இருக்கக் காரணம் என்ன? நாய்களையே எடுத்துக்கொண்டாலும் ஒரு நாய் கடி நாயாகவும், ஒரு நாய் கடிக்காத நாயாகவும், ஒரு நாய் திருடித் தின்னும் நாயாகவும், ஒரு நாய் போட்டால் ஒழிய சாப்பிடாத நாயாகவும், ஒரு நாய் எஜமானிடத்தில் அதிக பட்சமாகச் சதா கொஞ்சிவிளையாடும் நாயாகவும், ஒரு நாய் கூப்பிட்டால் ஒழிய கிட்டவாராத நாயாகவும், ஒரு நாய் அதிக புத்திசாலியாகவும், ஒரு நாய் சொன்னாலும் தெரிந்துகொள்ளாத நாயாகவும் இருக்கக் காரணம் என்ன? இந்தக் குணங்களுக்கு அந்தந்த நாயே பொறுப்பானதா? அல்லது பிறவிக்குணமா? அதாவது அந்த நாயின் சரீர அமைப்புக் குணமா? யோசித்துப் பாருங்கள்.

ஒரு மாடு முட்டிக்கொண்டிருக்கிறது, ஒரு மாடு [illegible] முட்டுவதில்லை. ஒரு [illegible] கொன்று [illegible] கொண்டே இருக்கிறது, ஒரு யானை எவ்வளவு அடித்தாலும் பாகனைக் கொல்லுவதில்லை, சாதுவாகவே இருக்கிறது.

இவற்றிற்கெல்லாம் அந்த ஜீவன்களே பொறுப்பானவைகளா அல்லது அவற்றின் சுபாவம், இயற்கைத் தன்மை, பிறவிக் குணங்கள் அல்லது சரீர அமைப்புத் தன்மைகள் காரணமா என்று சிந்தித்துப் பாருங்கள்.

அதுபோல்தான் மனித அமைப்பையும் சிந்தித்துப்பார்த்து மனித சுபாவங்களை அறியுங்கள். திருடன், பொய்யன், கோபக்காரன், வஞ்சகன், பொறாமைக்காரன், நன்றியே இல்லாதவன், வெறும் சுயநலக்காரன், என்கின்றதான முதலிய குணங்களுக்கு ஆளானவர்கள் அத்தனை பேரும் 100க்கு 90க்கு மேற்பட்டவர்கள் அவர்களின் சுபாவம் அல்லது சரீர அமைப்பு ஆகியவைகளின் காரணத்தால் ஏற்பட்ட பிறவிக்குணங்கொண்டவர்களேயாகும்.

வேய் குழல்—குழாய் ஒன்றுதான். ஊதுகிறவன் ஒருவன்தான். வாய் வைத்து ஊதுகிற இடம் ஒன்றுதான். ஆனால் அதில் பல மாதிரி சப்தம்—ஒலி கேட்கிறோம். காரணம் என்ன?

அந்தக் குழாயில் துளைக்கப்பட்டுள்ள ஓட்டைகள் காரணமாக அந்தக் காற்று எந்தெந்த ஓட்டையில் அல்லது ஓட்டைகளில் வெளியாக்கப்படுகிறதோ அதைப்பொறுத்துச் சப்தபேதம் கேட்கப்படுகிறது. அதுபோல்தான் அதாவது குழாயில் பல துளைகள் துளைக்கப்பட்ட அமைப்பால் சப்தபேதம் கேட்கப்படுவதுபோல் ஜீவ சரீரத்தில் மூளை நரம்பாதிய கருவிகள் அமைந்திருக்கும் அமைப்பால் குணபேதங்கள் காணப்படுகின்றன. இந்தப் பேத குணங்களுக்கு ஜீவன் அல்லது மனிதன் பொறுப்பாளி அல்ல என்பதும் மனித அமைப்புத்தான் என்பதும் இதனால் உணரலாம். இந்த அமைப்புத்தன்மையைப் பகுத்தறிவுள்ள மனிதன் அறிந்துகொள்ளாமல், அறிந்து அதற்கு ஏற்றபடி நடவாமல் எல்லா குணங்களையும் அந்தந்த மனிதன் மேல் பொறுப்பு ஏற்றி, விருப்பு, வெறுப்புக்கொண்டு வாழ்வில் [illegible] ஏமாற்றத்தை அநுபவிக்கிறான். மனிதனுக்கு மனிதன் சுபாவம் அறிந்து அதற்கேற்றபடி நடந்துகொள்ள மனிதன் வாய்ப்புப் பெறவே இல்லை.

தோற்றம், அதாவது பார்வை, எப்படி கண்களின் தன்மையைப்பொறுத்ததோ, எப்படி கேள்வி காதுகளின் தன்மையை பொறுத்ததோ அதுபோல்தான் அறிவு, ஆற்றல், நுட்பஉணர்வு, ஆராய்ச்சி, அற்புதம் அதிசயம் கண்டுபிடித்தல் முதலாகிய தன்மைகளும், கோபம், சிரிப்பு, சிடுமூஞ்சி, நட்புணர்ச்சி [illegible] முதலிய தன்மைகளும் இந்திரியங்களின் அல்லது தாதுக்களின் அமைப்பையே பொறுத்ததாகும்.

இவற்றை இவ்வளவு தூரம் ஏன் விளக்குகிறேன் என்றால் குணங்களுக்கு, செய்கைகளுக்கு மனிதன் பொறுப்பாளியல்ல என்பதை விளக்கவே, அதாவது நாய்க்கு விசுவாசம் இருப்பதுபோலவும் பூனைக்கு வஞ்சகம் திருட்டுவாழ்வு இருப்பது போலவும் கழுகுக்குத் தூரப்பார்வை இருப்பதுபோலவும், ஆந்தைக்கு இருட்டில் பார்வை இருப்பது போலவும் சரீர, இந்திரிய தாது, காரண அமைப்புப்படியான குணங்கள் செய்கைகள் சக்திகள் இருக்கின்றன என்பதையும் இதற்காகத் திருடனைக் கடவுளோ மதமோ, தரும சாஸ்திரமோ, சட்டமோ தண்டிக்கக்கூடியும் என்பது பொருத்தமற்றது என்பதையும் காட்டுவதற்கே ஆகும்.

கோழிக்குஞ்சு புழுக்களைத் தின்பதற்கும், கழுகு கோழிக்குஞ்சைத் தூக்கிச் செல்வதற்கும் கடவுள் தண்டிக்கமுடியுமா? அப்படியானால் கறையான் மரங்களைத் தின்பதற்கும், மண் இரும்பைத் தின்பதற்கும் கடவுள் தண்டிப்பவராக இருக்கவேண்டும்.

ஆகவே மனிதனின் அமைப்பு என்பதுபற்றிய விளக்கத்தை இவ்வளவுடன் நிறுத்திவிட்டு இனி ஆத்மா என்பதுபற்றிச் சிறிது பேசுகிறேன்.

குறிப்பு:- ஆத்மா என்பதைப்பற்றி விளக்கிப் பேசிய பேச்சு பின்னால் வரும்.

## மதிப்புரை

### "சங்க இலக்கியம்"

தமிழ் விரிவுரையாளர் புலவர் சி. இலக்குவன் M O L. அவர்களால் வெளியிடப்படும் "சங்க இலக்கியம்" என்ற ஞாயிறு வெளியீட்டை யாம் கண்ணுற்றோம். பண்டைத் தமிழரின் அக ஒழுக்கத்தைச் சங்கச் செய்யுட்களைக்கொண்டு விளக்குகின்றார் புலவர் இலக்குவனார். எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய கலித்தொகையுள் உள்ள ஒவ்வொரு பாடலும் அகப்பொருள் துறையில் பண்டைத் தமிழர் நாகரிகத்தைப் புலப்படுத்தும் ஒருநாடகமென்றியம்பலாம். அப்பாடல்களில் ஞாயிறுதோறும் ஒவ்வொன்றை 'சங்க இலக்கியத்துள்' விளக்கவுரையுடன் வெளிப்படுத்துகின்றார் புலவர்.

இதன் விலை ஒரு அணாதான்.

கிடைக்குமிடம்:- புலவர் சி. இலக்குவன், M. O. L. தமிழ் விரிவுரையாளர் சாலைத்தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilian Press, 42, Cutcherystreet, ERODE.